**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI**

**Deposition of Witnesses for P.W.3 in MCOP.No. 332/2022**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாராயணன் | தந்தை / கணவர் பெயர் | : கருப்பையா |
| கிராமம் | : | வட்டம் | : |
| வயது | : | மாவட்டம் | : |

Solemnly affirmed accordance with the provisions of the Act of 1973 of the day of 06.11.2025.

**முதல் விசாரணை**

நான் எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன். (மேற்படி சாட்சி மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.)

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில்குறுக்கு விசாரணை**

இளவரசன் என்பவரை எனக்கு தெரியும். இளவரசன் தற்போது வெளிநாட்டில் வசித்து வருகிறார். தாவா விபத்து சம்மந்தமாக போலிசில் நித்யா என்பவர் புகார் கொடுத்தார். அந்த புகாரை நான் படித்து பார்த்தேன். விபத்திற்கு பிறகு சுமார் 20 நாட்களுக்கு பிறகு தான் புகார் கொடுக்கப்பட்டது. துரையரசன் என்பவர் மீது தான் விபத்து சம்மந்தமாக வழக்கு போடப்பட்டது. மேற்படி துரையரசன் என்னுடைய உறவுக்காரர் ஆவார். அந்த குற்ற வழக்கில் போலிசார் என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் போலிசார் என்னை ஒரு சாட்சியாக சேர்க்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த விபரம் எனக்கு தெரியும். மேற்படி மனுவில் உயர்நீதிமன்றம் என்ன உத்தரவிட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னாலும், இறந்தநபர் இரண்டு சக்கர

வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி தனக்குத்தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக போலிசார் நடத்திய விசாரணைக்கு விரோதமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்த்த சாட்சி அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/– நாராயணன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.